**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.383 நாள்: 12.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களை சரிபார்த்து தயார்படுத்தும் பணியினை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், இன்று கோடம்பாக்கம் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களை சரிபார்த்து தயார்படுத்தும் பணியினை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், இன்று (12.08.2026) கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 133ஆவது வார்டு அலுவலகத்திலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு-101க்குட்பட்ட செனாய் நகர், அம்மா அரங்க வளாகத்திலும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-110க்குட்பட்ட வள்ளுவர் கோட்டம் விளையாட்டுத் திடல் மற்றும் வள்ளுவர் கோட்டம் சாலையோரப் பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், புஷ்பா நகர் பிரதான சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணி, வார்டு-117க்குட்பட்ட ஜெ.ஜெ. நகர் மற்றும் டாக்டர் தாமஸ் சாலையில் விளையாட்டுத் திடல்கள் அமைப்பது தொடர்பாகவும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-133க்குட்பட்ட மாசிலாமணி தெருவில் உள்ள நகர விற்பனைக் குழு உறுப்பினர்களின் அலுவலகம், மாசிலாமணி தெருவில் கட்டப்பட்டு வரும் தூய்மைப் பணியாளர்களுக்கான ஓய்வறைக் கட்டடப் பணி, வார்டு-141க்குட்பட்ட பர்கிட் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டலக் குழுத் தலைவர் திரு.கூ.பி.ஜெயின், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**